மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவைகுண்டம்
2026 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 08–ம் நாள் புதன்கிழமை
அ.வ.எண். 22/21
பி.சா.2

சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டின் ஆணையுறுதி சட்டத்தின் வகைமுறைகளின் கீழ் (44 வது சட்டம்) திரு.எம்.ஹரிராமகிருஷ்ணன்,M.A.,M.Phil.,L.L.M., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதிகூறி வைக்கப்படுகிறது.

---

பெயர்:ஷாஜகான் தேதி : 08.04.26
வயது : த/பெ : முகமது அலி
கிராமம் : தொழில் :
மாவட்டம்:

---

<u>08.04.26 வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

1.எனது முதல் விசாரணையில் தபசில் சொத்தில் இருந்த தென்னை மரங்கள் என்ன நிலையில் இருந்தன என்று கேட்கப்பட்டதற்கு மகசூல் தரும் நிலையில் இருந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் ஆம். நான் சொன்ன மேற்படி தபசில் சொத்து எது என்றால் பிரதிவாதியால் அவரது சொத்து உட்பட ஒட்டு மொத்தமாக போடப்பட்டுள்ள இரும்பு வேலிக்குள் காணப்பட்ட தென்னை மரங்களை உள்ளடக்கிய பகுதியை தபசில் சொத்து என்று சொல்லியுள்ளேன்.

2.ஆக்கிரமிப்பு பகுதியாக நிர்ணயம் செய்யப்பட்ட பகுதியில் தென்னை மரங்கள் இருந்ததா என்றால் இல்லை. தரிசாக இருந்தது. என்னுடைய முதல் விசாரணையில் 3 ம் பத்தியில் அந்த இடத்தில் பென்சிங் போடப்பட்டுள்ளது என்று சொல்லப்பட்டுள்ளது எதை குறிக்கும் என்றால் 1 மீட்டர் தள்ளி வைத்து அளவீடு செய்து வரும்போது பிரதிவாதிகளின் பென்சிங் அடைப்பில் வடக்கு பக்க மால் சரியாக வந்தது. அதை குறிக்கும் வகையில் சொல்லியுள்ளேன்.

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.04.08 16:13:10 +0530

3.வடபுற கம்பி வேலியில் இருந்து அளந்த போது அளவுகள் பொருந்தி வந்தன என்றால் ஆம்.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.04.08 16:13:15 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி ,
ஸ்ரீவைகுண்டம்.